செய்தி வெளியீடு எண்–275 நாள்– 15.4.2008

# திருவள்ளூர் மாவட்டம் காட்டுபள்ளி கிராமத்தில் ரூ.3,068/– கோடி முதலீட்டில், 10 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் தெற்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய கப்பல் கட்டும் தளம் மற்றும் தனித்துறைமுக வளாகம்

## முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்தானது

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் (டிட்கோ) லார்சன் அண்ட் டூப்ரோ நிறுவனமும் இணைந்து திருவள்ளூர் மாவட்டம், எண்ணூர் அருகில் உள்ள காட்டுப்பள்ளி கிராமத்தில் ரூ.3,068/– கோடி முதலீட்டில் உலகத் தரம் வாய்ந்த, ஒருங்கிணைந்த கப்பல் தளம் மற்றும் தனித்துறைமுக வளாகம் ஒன்றினைக் கூட்டுத்துறையில் அமைக்க உள்ளனர். இதன் மூலம் 5000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், 5000 பேருக்கு மறைமுக வேலை வாய்ப்பும் உருவாகும்.

இந்த கப்பல் தளம் மற்றும் தனித்துறைமுக வளாகத்தில்,

மிகப்பெரிய சரக்கு கப்பல்கள், திரவ எரிவாயு மற்றும் எரிவாயு ஆகியவற்றை ஏற்றிச் செல்லும் தனித்திறன் கொண்ட கப்பல்கள்; பயணிகள் கப்பல்கள், கடற்படைக்குத் தேவையான போர்க் கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கலங்கள் ஆகியவை வந்து செல்லும் வசதிகள்;

பெட்ரோலியம் மற்றும் எரிவாயு ஆகியவற்றைக் கையாள்வதற்கு ஏற்ற உபகரணங்களுடன் கூடிய மேடை வசதிகள்,

வணிக மற்றும் போர்க்கப்பல்களைச் செப்பனிடுதல் மற்றும் மாற்றியமைக்கும் பணிகளுக்கான வசதிகள்;

கப்பல் கட்டுமானத்திற்குத் தேவையான கனரக இயந்திர கட்டமைப்புகள், பாகங்கள் மற்றும் துணைப்பொருட்கள் தயாரிப்பு வசதிகள்

ஆகியவற்றோடு கூடிய முழு அளவிலான ஒருங்கிணைந்த வசதிகள் கொண்ட பிரிவுகள் உருவாக்கப்படும்.

இக்கப்பல் தளத்தை அமைப்பதற்கு ஆந்திரா, குஜராத், மகாரஷ்டிரா மாநிலங்கள் மற்றும் தமிழ் நாட்டின் பல கரையோர பகுதிகளை மதிப்பாய்வு செய்தபின் காட்டுபள்ளி கிராமத்தின் கரையோர நிலங்களே உகந்ததென லார்சன் அண்ட் டூப்ரோ நிறுவனம் தேர்ந்தெடுத்துள்ளது. இதற்கு, தமிழக அரசின் தொழில் முன்னேற்ற அணுகுமுறையும், தமிழகத்தில் பெருவாரியாக அமைந்துள்ள தொழில் நுட்பங்களில் பயிற்சி பெற்ற, திறமை வாய்ந்த மனிதவள ஆதாரங்களும் முக்கிய காரணங்களாகும்.

இத்திட்டத்தில் கப்பல் கட்டுமானத்திற்கும், ஏற்றுமதிக்கும் தேவையான உபகரணங்கள் மற்றும் உதிரிபாகங்கள் தயாரிக்கும் பல துணைத் தொழில் பிரிவுகள் உருவாக்கப்படும். இத்திட்டம் செயற்படும் போது, சென்னையில் மோட்டார் வாகன உதிரிபாகங்கள் மற்றும் மின்னணு உபகரணங்கள் தயாரிக்கும் மையங்கள் அமைந்துள்ளதுபோல, கனரகத் தொழில்களுக்கான ஒரு மையமாகவும் இது திகழும்.

லார்சன் அண்ட் டூப்ரோ நிறுவனம் பொறியியல், கட்டுமான மற்றும் கட்டமைப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள நாட்டின் மிகப்பெரிய நிறுவனங்களில் முதன்மையானதாகும். இந்நிறுவனம் இயந்திரம், கனரக கட்டமைப்பு, மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்ப சேவைகளிலும் சிறப்பாக செயற்பட்டு முன்னோடியாகத் திகழ்கிறது. நாட்டின் பல இடங்களிலுள்ள இந்நிறுவனத்தின் தொழிற்சாலைகளிலும், அலுவலகங்களிலும் பல்லாயிரக்கணக்கானோர் பொறியாளர்களாகவும், தொழில் நுட்ப வல்லுநர்களாகவும் பணிபுரிகின்றனர். மேலும், இந்நிறுவனம் நாட்டிலேயே அரசு அல்லாத நிறுவனங்களில் போர்க் கப்பல்கள் தயாரிப்பதற்கான உரிமத்தைப் பெற்றிருக்கும் ஒரே நிறுவனம் ஆகும். இத்திட்டத்திற்கான முதற்கட்ட பணிகளை டிட்கோவும், லார்சன் அண்ட் டூப்ரோ நிறுவனமும் இணைந்து செய்து வருகின்றன. இத்திட்டத்தின்

கட்டுமானப் பணிகள் இவ்வாண்டு இறுதிக்குள் தொடங்கப்பட்டு அதன் பின்னர் இருபத்தி நான்கு மாதங்களில் முடிவடையும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முன்னிலையில் நடைபெற்ற இத்திட்டத்திற்கான ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பில் டிட்கோ நிறுவனத்தின்தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு எஸ். இராமசுந்தரம், இ.ஆ.ப., லார்சன் அண்ட் டூப்ரோ நிறுவனத்தின் சார்பில் அதன் இயக்குநர் குழும உறுப்பினர் மற்றும் தலைவர் (கட்டுமானப்பணி) திரு கே.வி. ரங்கசுவாமி, ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.துரைமுருகன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன், லார்சன் அண்ட் டூப்ரோவின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு ஏ. எம். நாயக், தலைமைச் செயலாளர் திரு.எல்.கே. திரிபாதி இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு.கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., நெடுஞ்சாலைத்துறைச் செயலாளர் திரு.கே. அலாவுதின் இ.ஆ.ப ஆகியோர் உடனிருந்தனர்.

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.